தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்


இரண்டாம் தவணைப் பரீட்சை - 2021

# Conducted by Field Work Centre, Thondaimanaru.

## 2nd Term Examination - 2021

FWC

ஐரோப்பா வரலாறு



**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

**இரண்டாம் தவணைப் பரீட்சை - 2021**

# Conducted by Field Work Centre, Thondaimanaru.

# 2nd Term Examination - 2021

FWC

| | | |
|---|---|---|
| ஐரோப்பிய வரலாறு<br>**Europe History** | **Three Hours 10 min**<br>**Gr -12 (2022)** | **25 B** \| **T** \| **I,II** |

**கவனிக்க.**

- ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
- ***01 – 05 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பெயர்கள் வீதம் தரப்பட்டுள்ளன. அப்பெயர்கள் ஒன்று ஏதோ ஒரு காரணத்தினால் ஏனையவற்றுடன் பொருந்தாது. பொருந்தாத அப்பெயரை இனங்கண்டு அதன் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.***

1) 1. கிறிஸ் 2. ஜீனிசியா 3. பபிலோனியா
4. பீனிஷியா 5. மினோவன் ( )

2) 1. கலன் 2. சோக்கிரடிஸ் 3. பிளேட்டோ
4. ஆகிமிடிஸ் 5. அரிஸ்போட்டில் ( )

3) 1. ரைன் 2. றோன் 3. வொல்கா
4. டைபர் 5. நைல் ( )

4) 1. ஹங் 2. மங்கோலியர் 3. பிராங்
4. வண்டோல் 5. அங்கலோ சக்சன் ( )

5) 1. கலிலியோகலிலி 2. ஜோன் வைக்கிளிப் 3. ஜசாக் நியூட்டன்
4. ஜொகனஸ் கெப்லர் 5. நிக்களஸ் கொப்பனிக்கஸ் ( )

- ***06 தொடக்கம் 10 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து சோடிப் பெயர்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் ஒரு சோடியிலுள்ள பெயர்கள் ஒன்றுடனொன்று பொருந்தவில்லை. அச்சோடியைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் இடுக.***

6) 1. யூப்பிட்டர் - விண்வெளி தெய்வம்
2. மினர்வா - கைப்பணி தேவதை
3. வீனஸ் - காதல் தேவதை
4. நைப்ரியூன் - கடற்தேவன்
5. மார்ஸ் - சந்திர தேவன்
( )

7) 1. பிளேட்டோ - அக்கடமி
2. அரிஸ்ரோட்டில் - லைசியம்
3. தோமஸ் அக்குயினாஸ் - சுமாதியோலோஜியா
4. இராமஸ் - மடமையின் புகழ்ச்சி
5. மார்ட்டின் லூதர் - கடவுளின் நகரம் ( )

8) 1. சொபோர்ஸா - மிலான்
2. மெடிஸி - புளோரன்ஸ்
3. எஸ்தே - பெராரா
4. வலோயி - நேபிள்ஸ்
5. கொன்சாகா - மந்துவா ( )

9) 1. வாஸ்கொடகாம - கள்ளிக்கோட்டை
2. அமெரிக்கோ வெஸ்புசி - அமெரிக்கா
3. கொலம்பஸ் - கரிபியன் தீவுகள்
4. மகலன் - பிலிப்பைன்ஸ்
5. பத்தலோமிமியஸ் டயஸ் - மடகஸ்கார் ( )

10) 1. மத்திய தரைக்கடலும் செங்கடலும் - சுயெஸ் கால்வாய்
2. வடகடலும் பால்டிக்கடலும் - கீல்க் கால்வாய்
3. மெறொக்கோவும், ஸ்பானியாவும் - டாடனஸ் நீரினை
4. அத்திலாந்திக் சமுத்திரமும்பசுபிக் சதுத்திரமும் - பனாமாக் கால்வாய்
5. இங்கிலாந்தும் - பிரான்சும் - ஆங்கிலாக் கால்வாய் ( )

- ***11 – 15 வரையான வினாக்களுக்கு X ,Y என நிரல்களில் பொருந்தக்கூடிய வகையில் தொடர்படுத்தும் போது வரும் சரியான சேர்மானத்தின் விடையை இனங்கண்டு அவற்றுக்குரிய இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.***

11)

| | X | Y |
|---|---|---|
| 1. | கிளிஸ்தெனிஸ் | A. மருத்துவத்தின் தந்தை |
| 2. | ஹெரடோற்றஸ் | B. விஞ்ஞானபூர்வ சோஸ்லிசத்தின் ஸ்தாபகர் |
| 3. | ஹிப்போகிரடீஸ் | C. மானிடவாதத்தின் தந்தை |
| 4. | பெற்றாக் | D. அதினியன் குடியாட்சியின் தந்தை |
| 5. | கார்ள்மாக்ஸ் | E. வரலாற்றின் தந்தை |

1. ECBDA 2. DCEAB 3. BAEDC 4. DEACB 5. AEBDC ( )

12)

| | X | Y |
|---|---|---|
| 1. | ரைபர் நதி | A. ஆங்கிலக் கால்வாய் |
| 2. | டன்யூப் நதி | B. வடகடல் |
| 3. | ஸைன் நதி | C. மத்திய தரைக்கடல் |
| 4. | எல்ப் நதி | D. போல்டிக்கடல் |
| 5. | விஸ்ரியூலா நதி | E. கருங்கடல் |

1. DECBA 2. CEABD 3. DAECB 4. AEBDC 5. EDCAB ( )

13)

| | X | Y |
|---|---|---|
| 1. | பிளேட்டோ | A. இளவரசன் சிங்கத்தைப்போலவும் நரியைப் போலவும் பாவனை செய்தல் வேண்டும் |
| 2. | அரிஸ்ரோட்டில் | B. பெருமளவானோரின் பெரியளவிலான மகிழ்ச்சி |
| 3. | மாக்கியவலி | C. அதிகாரப் பகிர்வு கோட்பாடு |
| 4. | மொண்டஸ்கியூ | D. ''மனிதன் ஓர் அரசியல் பிராணி'' |
| 5. | ஜெரமி பெந்தம் | D. தத்துவஞானிகளே மன்னர்கள் ஆக வேண்டும். |

1. DECBA 2. DCEAB 3. DABCE 4. DBAEC 5. EDACB ( )

14) X | Y

1. நிக்கலஸ் கொப்பனிக்கஸ் — A. ஜேர்மனியர்
2. ஜொஹனஸ் கெப்லர் — B. போலந்தர்
3. கலிலியோ கலிலி — C. ஸ்பானியர்
4. மைக்கல் சர்வேட்டஸ் — D. ஆங்கிலேயர்
5. வில்லியம் ஹார்வே — E. இத்தாலியர்

1. DECBA  2. DCAEB  3. BAECD  4. DCEAB  5. DEBAC  (  )

15) X | Y

1. நோர்வே — A. வார்சோ
2. பின்லாந்து — B. ஒஸ்லோ
3. போலந்து — C. சோ.பியா
4. பல்கேரியா — D. புடாபெஸ்ட்
5. ஹங்கேரி — E. ஹெல்ஸிங்கி

1. DECBA  2. CEABD  3. ECDAB  4. BEACD  5. DEBAC  (  )

- **16 – 20 வரையுள்ள எல்லா வினாக்களுக்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புப் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

16) பரிசுத்த உரோமப் பேரரசு என தனது அரசுக்கு பெயரிட்டவர்.
1. கொன்ஸ்தாந்தின்  2. தியோடசியஸ்  3. குளேவிஸ்
4. சாளிமன்  5. ஓகஸ்டர் சீசர்  (  )

17) நாடுகாண் பயணத்தில் முதலில் ஈடுபட்ட நாடு
1. ஜேர்மனி  2. போர்த்துக்கல்  3. ஒல்லாந்து
4. ஸ்பானியா  5. பிரான்ஸ்  (  )

18) கிழக்கு உரோமப் பேரரசின் தலைநகரம் எது?
1. உரோம்  2. அலெக்சாந்திரியா  3. ஜெருசலேம்
4. கொன்ஸ்தாந்தின்  5. டமஸ்கஸ்  (  )

19) முப்பதாண்டுப் போரில் ஈடுபட்ட நாடு.
1. டென்மார்க்  2. ரஷ்யா  3. போலந்து
4. நோர்வே  5. இங்கிலாந்து  (  )

20) வீனஸின் பிறப்பு (Birch of Venus) என்ற ஓவியத்தை வரைந்த புகம்பெற்ற ஓவியக் கலைஞர் யார்?
1. மஸசியோ  2. பொட்டிசெல்லி  3. லியானாடோ டாவின்ஸி
4. ரிரியன்  5. ரபாயல்  (  )

## பகுதி – II

**அறிவுறுத்தல்கள் :**

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினாவுக்கு விடை அளிப்பதற்கு ஐரோப்பிய புறவுருவப்படம் வழங்கப்படும்.**
- **ஏனைய வினாக்களில் விரும்பிய ஒன்றுக்கு மட்டும் விடை தருக.**

**01. பின்வரும் இடங்களை ஐரோப்பிய புறவுருவம் படத்தில் குறித்து பெயரிடுக.**

1) பிரனீஸ்மலைத்தொடர் 2) கருங்கடல் 3) கொன்ஸ்தாந்திநோபில்
4) சைன்நதி 5) லண்டன் 6) பெல்ஜியம்
7) கோர்சிக்கா 8) வியன்னா 9) ஜிப்ரோல்ற்றர் நீரினை
10) லிஸ்பன் 11) நெதர்லாந்து 12) கீல்கால்வாய்
13) கிரிமியா 14) உரோம்

(14 புள்ளிகள்)

❖ **கீழே தரப்பட்ட வினாக்களில் விரும்பிய இரண்டிற்கு விடையளிக்குக?**

02. பின்வரும் தலைப்புகளில் புராதன கிரேக்க கலாசாரத்தின் முனைப்பான பண்புகளைப்பரிசீலிக்குக.
1) அரசியல் முறை
2) சமயம்
3) இலக்கியம்

(16 புள்ளிகள்

03. 1) 15 ஆம் 16ஆம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகியன புதிய நாடுகளைக் கண்டுபிடித்தமை பற்றிச் சுருக்கமாக விளக்குக.
2) அவற்றின் விளைவுகளை பரிசீலனை செய்க.

(16 புள்ளிகள்)

04. 1) பதினைந்தாம், பதினாறாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் தேசிய அரசுகளின் தோற்றத்திற்கு வழிவகுத்த காரணிகள் யாவை?
2) தேசிய அரசுகளின் பிரதான பண்புகளை பரிசீலனை செய்க.

(16 புள்ளிகள்)